# முரசொலி

## அண்ணா மலர் 1967



டி.எம். சுப்பிரமணியம்

ரூ 1·25


மக்கள் திலகம்
எம்.ஜி.ஆர்
அளிக்கும்
சத்யா மூவீஸ்
காவல்காரன்
இசை
M.S. விஸ்வநாதன்
ஒளிப்பதிவு
V. ராமமூர்த்தி
திரைக்கதை, தயாரிப்பு
R.M. வீரப்பன்
டைரக்ஷன்
ப. நீலகண்டன்
ELEGANT




மகிழ்ச்சியான மணவாழ்வுக்கு
திட்டமிட தருணம் இதுவே

## இன்றே ஐஓபியில் ஒரு சேவிங்ஸ் கணக்கு ஆரம்பியுங்கள்

சேமிக்கக் காரணம் எதுவாயினும் ஐஓபி உங்கள் பாங்காக இருக்கட்டும்.

ஐஓபி-பணிசெய் அளவுதிறன் உண்டு. உம்முடன் பழகும் அளவு பணிவுண்டு

**இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிமிடெட்**

சென்ட்ரல் காரியாலயம், 151 மவுண்ட் ரோடு, மதராஸ் 2

M. Ct. முத்தையா, சேர்மன்  C. லக்ஷ்மிநாராயணன், ஜெனரல் மானேஜர்

IOB-4196

ஃ சிறந்த வேலை

ஃ குறித்த காலம்

ஃ அழகிய அச்சுக் கலை

இவைகளுக்கு

எல்லோரும் நாடி வருவது

# ஆர். ஆர். பிரிண்டிங் ஒர்க்ஸ்

விவரங்களுக்கு

ஆர். ஆர். பிரிண்டிங் ஒர்க்ஸ்,

12, ஒயிட்ஸ் ரோடு, — சென்னை-14.

# அண்ணனின் பெருமை விளக்கத்
# தென்னகப் பல்கலைக் குழுவினர் அளிக்கும்
# இரு கழகப் பிரச்சார நிகழ்ச்சிகள்

## குமாரி விசயா
குழுவினரின்
## ஆளுகின்றார் அண்ணா
எழுதியவர்; 'முத்தாரம்' தினகரன்

(கதா காலட்சேபம்)

## சதாசிவம்-மோகனா
குழுவினரின்
## அண்ணாவின் அரசு
(கலா நிகழ்ச்சி)

எழுதியவர்: கவிஞர் சுப்பு. ஆறுமுகம்

இரு நிகழ்ச்சிகட்கும் தொடர்பு முகவரி:

**மு. வரதராசன்,**

தென்னகப் பல்கலைக் குழு,

325, திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை, சென்னை 5

---

**நாலரைக் கோடி மக்களின் நாயகன்-நமது அண்ணன்**
**-நாட்டின் முதல்வர் அறிஞர் அண்ணா அவர்களின்**
**59-வது பிறந்த நாள் வாழ்த்துக்கள்**

# தி நாஞ்சில் பிரிண்டர்ஸ்,

16, அஜீஸ் முல்க் 4-வது தெரு,

ஆயிரம்விளக்கு — சென்னை-6.

போன்: 87927.

உரிமையாளர்: நாஞ்சில் ப. கில்பர்ட்

பசிப்பிணியை ஒழிக்கும் நல்லதொரு முயற்சியில்

வெற்றி முழக்கம் கொட்டி வரும்

எங்களது

# PSGR பிராண்டு கலப்பு உரங்கள்,

சூப்பர்பாஸ்பேட் 18% & 16%

உழவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவைகளாகும்

தயாரிப்பாளர்கள்:—

ஃ

## கோயமுத்தூர் பயனீர் பெர்டிலைசர்ஸ் லிமிடெட்

அலுவலகம்:—
" பயனீர் ஹவுஸ் "
பீளமேடு அஞ்சல்,
**கோயமுத்தூர்-4.**

தொழிற்சாலை:—
முத்துக்கவுண்டன்புதூர் அஞ்சல்,
சூலூர் ரோடு புகைவண்டி நிலையம்,
**கோவை மாவட்டம்.**

ஃ இது ஒரு பயனீர் குரூப் ஸ்தாபனம்.




சங்கர் பிராண்ட்

# போர்ட்லண்ட் சிமெண்ட்
# போர்ட்லண்ட் போஸ்ஸோலானா சிமெண்ட்
# இப்பொழுது உடனடியாக கிடைக்கிறது

**உங்களுக்கு தேவையான சிமெண்டை அருகாமையிலுள்ள எமது விநியோகஸ்தர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.**

வழக்கமாக வழங்கப்படும் போர்ட்லண்ட் சிமெண்ட் உற்பத்தியை பெருக்கியதினாலும் மேலும் புதிய தர போர்ட்லண்ட் போஸ்ஸோலானா சிமெண்ட் உற்பத்தியை துவக்கியதின் மூலமும் எமது சிமெண்ட் இப்பொழுது மக்களுக்கு தாராளமாக கிடைக்க உதவி இருக்கிறது. போஸ்ஸோலானா சிமெண்ட், போர்ட்லண்ட் சிமெண்ட் உபயோகப்படுத்தப்படும் எல்லா வேலைகளில் உபயோகப்படுத்தலாம். முக்கியமாக, மாபெரும் கட்டட வேலைகளுக்கும் மற்றும் எப்பொழுதும் நீரில் தொடர்பு கொண்டிருக்கும் கட்டடங்களுக்கும் மிகவும் அவசியமானது. இப்பொழுது ISI நற்சாட்சி பத்திரமும்பெற்றுள்ளது.

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: தன் பில்டிங், 175/1, மவுண்ட் ரோட், சென்னை-2.

தொழிற்சாலைகள்: சங்கர்நகர் மற்றும் சங்கரி

FDSIC794TM

தமிழகத்தின் முதலமைச்சர்

அறிஞர் பெருந்தகை

திரு. அண்ணாத்துரை



அவர்களின் 59-வது பிறந்தநாளின் போது

எமது மனமார்ந்த

# நல் வாழ்த்துக்கள்

நீண்ட ஆயுளுடன் நாட்டிற்கு மேலும் மேலும் நற்பணியாற்றி மக்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற வாழ்த்துகின்றோம்.

★

## மதராஸ் பளையகாட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்

PALAYAKAT CO. PVT. LTD. MADRAS

MADRAS

எங்கள் "சங்கு" மார்க்

லுங்கிகள், கைகுட்டைகள், வேஷ்டிகள்

சாயத்திற்கும் உழைப்பிற்கும் உறுதிககும்

பெயர் பெற்றவை

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

கல்யாண காலங்களுக்கு...

★

பட்டுச் சேலைகள்

பாவாடைத் துண்டுகள்

சோளி பீஸ் ரகங்கள்

★

தென்னிந்தியாவிலேயே பட்டுச் சேலைகளுக்கு

நற்கியாதிபெற்ற ஸ்தாபனம்...

★

# நல்லி சின்னசாமி செட்டி

(பனகல் பார்க்)

தியாகராய நகர் : : சென்னை-17.

டெலிபோன் நெ. 444115, 444111

தமிழகத்தின் நலத்திற்கும், வளத்திற்கும் அயராது உழைக்கும், நமது முதலமைச்சர் திரு. அண்ணாத்துரை அவர்கள் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து, தமது பணியைத் தொடர எமது வாழ்த்துக்கள்!

# தொழில் துறையில் ஐக்கியம்

முன்னேற்றத்திற்கான திட்டங்கள் நன்கு நிறைவேறவும், பொருளாதாரம் உறுதிபெறவும் ... தொழிலதிபர்கள், தொழிலாளர்களுக்கிடையே ஒற்றுமை நிலவ வேண்டுவது அவசியம். நிர்வாகத்தினரும், தொழிலாளரும் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்.

பிரச்னைகளை நன்கு அலசி ஆராய்ந்து, அவற்றின் உண்மைத் தன்மையை இருசாராரும் உணர வேண்டும்.

இரு தரப்பினரும் தங்கள் நன்மைகளுக்காக ஒத்துழைக்க வேண்டும்.

பிரச்னைகளை இரு தரப்பினரும் விவாதித்து நல்ல முடிவுகாண வேண்டும்.

# தி ஈசன் குரூப்:

ஈசன் இன்ஜினீயரிங் கம்பெனி லிமிடெட்,

ஹாக்பிரிட்ஜ்—ஹெவிடிக் அண்ட் ஈசன் லிமிடெட்,

ஈஸ்வரன் & ஸன்ஸ் இன்ஜினீயர்ஸ் பிரவேட் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் & தலைமை அலுவலகம்
5-7, ஸெகண்ட் லைன் பீச், சென்னை-1.

ஜெனரல் இன்ஜினீயரிங் & ஸ்டரக்சுரல் ஸெர்விஸ்கள்

* தொழிற் துறைகளுக்கான பூரண மின்சார அமைப்புகள்
* எலக்டிரிகல் & மெக்கானிக்கல் உபகரணங்கள் மற்றும் சேவைகள்

தபால் பெட்டி எண் : 3. தொலைபேசி எண் : 214.

தோற்றம் : 1910.




# ஸ்ரீ கமலாம்பிகா
# கோவாப்பரேட்டிவ் அர்பன் பாங்கு லிமிடெட்,

## திருவாரூர் :: தஞ்சை மாவட்டம்

தலைவர்: திரு. எம். ராமதாஸ் முதலியார், பி.ஏ., பி.எல்.,

(தமிழ்நாட்டில் சிறந்தகூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப் பாங்குக்குத் தமிழக அரசாங்கம் கேடயம் வழங்கியுள்ளது.)

## புள்ளி விபரங்கள்: 30—6—1967-ல் உள்ளபடி

| | | |
|---|---|---|
| பங்குத் தொகை | — ரூ. | 8:06,598 |
| டெப்பாசிட்டுகள் | — ரூ. | 45,54,467 |
| கடன்கள் | — ரூ | 37,52,605 |
| நடைமுதல் மூலதனம் | — ரூ. | 55,62,274 |

கீழ்க்கண்ட விகிதங்களில் பிக்ஸட் டெப்பாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 3 மாத கெடுவுக்கு | — $5\frac{1}{4}\%$ | per annum |
| 6 ,, | — $5\frac{3}{4}\%$ | ,, |
| 12 ,, | — $6\frac{1}{4}\%$ | ,, |
| 24 ,, | — $6\frac{3}{4}\%$ | ,, |
| 36 ,, | — $7\frac{1}{4}\%$ | ,, |
| 60 ,, ம் அதற்கு மேலும் | — $7\frac{3}{4}\%$ | ,, |

ரூ. 5,000/-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் மேற்கண்ட விகிதத்தோடு $\frac{1}{4}$ சதவிகிதம் அதிகம் கொடுக்கப்படும்.

ரூ. 10,000/-க்கும், அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் மாதாந்திர வட்டி வழங்கப்படுகிறது.

விபரங்களுக்கு, காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும்.

# பரிசு திட்டம் & தவணைமுறை

ரேடியோ, சைக்கிள், தையல்மிஷின், கெடிகாரங்கள், ஸ்டீல்பர்னீச்சர் எவர்சில்வர் சாமான்கள், பித்தளைபாய்லர், பிரஸ்டேஜ்குக்கர்கால்கேஸ்குக்கர், மரபீரோ, சோபா கம்பெட், முதலிய சாமான்கள் சுலபமான தவணை முறையிலும் பரிசு திட்டத்திலும் வாங்க சிறந்த இடம்.

## குளோப் — டோன் டிரேடிங் கோ,

10-வது ஆண்டு விழா சென்னை மேயர் தலைமையில்

*1966ல் கொண்டாடியதும் 9 கிளைகளை கொண்ட பெரும் ஸ்தாபனம்.*

H.O. சென்னை 23. போன் : 64005. & 62913

கிளைகள் . அயனாவரம், சைதை, சென்னிமலை, (ஈரோடு) அரக்கோணம், வேலூர். சித்தூர் (AP) திருவண்ணாமலை.



“அண்ணா” என அன்புடன் அழைக்கப்படும்
நமது மாநில முதலமைச்சர்
திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின்
59-வது பிறந்த நாளின்போது

## எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

★

# ஸ்ரீ அம்பாள் & கோ.,

ஆபீஸர் பட்டணம் பொடி தயாரிப்பாளர்கள்
201, தங்கசாலை தெரு, மதராஸ்-1.

RASHTRAPATI NILAYAM,
BOLARUM (HYDERABAD).
राष्ट्रपति निलयम,
बोलारम (हैदराबाद)।

August 22, 1967.



திரு. சி. என், அண்ணாதுரைக்கு அவரது 59-வது பிறந்த நாளின்போது எனது பாராட்டு களையும் அவர் இன்னும் நீண்ட பல ஆண்டுகள் நாட்டுக்குத் தன் பயன்மிக்கத் தொண்டினைத் தொடர்ந்து ஆற்றிட எனது நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

Zakir Husain



VICE-PRESIDENT
INDIA
NEW DELHI

August 16, 1967.

தமிழ் நாடு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரையின் 59-வது பிறந்த நாளையொட்டி 'முரசொலி' சிறப்பு மலர் வெளியிடுவது கண்டு மகிழ்ச்சி. அவரது இப்பிறந்தநாளின்போது அவர் நல்ல உடல் நலனோடு நீடு வாழ்ந்து தமிழ் நாட்டு மக்களுக்குத் தொண்டாற்றிட வாழ்த்துகிறேன்.

V. V. Giri





RAJ BHAVAN
Guindy, Madras,
11th September 1967

GOVERNOR OF MADRAS
सत्यमेव जयते

தமிழகத்து முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களது 59–வது பிறந்த நாள் விழா செப்டம்பர் 15–ஆம் தேதி கொண்டாடப் பட இருப்பதறிந்து மகிழ்ச்சி.

நான் எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை அவருக்கு இந்நாளில் தெரிவித்துக் கொள் கிறேன். அவர் நலம் பல எய்திட விழைந்து அவருக்குள னது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



**N. SANJIVA REDDY**
SPEAKER, LOK SABHA
20, AKBAR ROAD,
NEW DELHI

August 31, 1967

என் அன்புள்ள மாறன்,

தங்கள் கடிதம் கிடைத்தது. ஸ்ரீ அண்ணா துரை அவர்களது 59-வது பிறந்தநாளையொட்டி தாங்கள் 'முரசொலி' சிறப்பிதழ் வெளியிட இருப்பதறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீ அண்ணாதுரையை இந்தியா முழுவதும் அறிவார்கள். நாட்டின் மிக முக்கியத் தலைவர். சமூகத்தில் ஏழை எளியோர் மீது அவர் கொண்டுள்ள அன்பும், அவர்கள் வாழ்வில் சிக்கல்கள் நீங்கிடவும் அவர் ஆற்றும் பணிகள் சகல தரப்பு மக்களாலும் வரவேற்றுப் பாராட்டப்படுகின்றது.

நாட்டுக்கும், குறிப்பாகத் தமிழ் நாட்டுக்கும் அவரது பணி இனி நீண்ட காலத்துக்குத் தேவைப்படும். அவரது உடல் நலனுக்கும் நீண்ட ஆயுளுக்கு இறைஞ்சுவோமாக.

தங்கள் உண்மையுள்ள





CHIEF MINISTER
WEST BENGAL
Calcutta,
August 17, 1967

ஓ. எம். சுப்பிரமணியன்

'முரசொலி' நாளிதழ் திரு. சி. என். அண்ணாதுரையின் 59-வது பிறந்த நாளின்போது சிறப்பிதழ் வெளியிடுகிறது. திரு. அண்ணாதுரை ஒரு பத்திரிகையாளர், ஒரு நூலாசிரியர், திறன்மிக்க நிர்வாகத் தலைவர். தென்னாட்டினுடையவும் தமிழ் நாட்டினுடையவும் அரசியல் வாழ்வில் புதிய வலிவைக் கூட்டியுள்ளார். அவர் ஆட்சித் தலைமையில் இருந்துள்ள இக்குறுகிய சில மாத காலத்தில் அவர் எடுத்துள்ள பல முயற்சிகள் முன்னேற்றத்தையும், உறுதி நிலைப் பாட்டையும் உண்டு பண்ணியுள்ளன. அவரது பிறந்த நாளின்போது அவர் எல்லா நலன்களும் நிறைவாகப் பெற்றிடவும் தமிழகத்தின் தொடர்ந்த முன்னேற்றத்துக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் அவரது நண்பர்களோடு நானும் சேருகிறேன்.

A. K. Mukherjee



Girija
30 Edward Elliot Road,
Mylapore, Madras-4

August 14, 1967

அன்புள்ள திரு. மாறன்,

நமது நாட்டிற்கு வலிமை மிக்கத் தலைமை இப்போது தேவை செய்யும் காரியம் யாவினும் நேர்மை, உறுதிமிகுந்த நாட்டுப் பற்று, தோழமை உணர்வு, இவையே ஒரு தலைவனை தனித்துக் காட்டுவதாகும். திரு. அண்ணாதுரையிடம் இந்த நற்குணங்கள் யாவும் நிறைந்திருக்கின்றன என்பதிலும் நமது மக்களை அவர் நேர்வழியில் தேசிய ஒற்றுமையையும், முன்னேற்றத்தையும் நோக்கி அழைத்துச் செல்வார் என்பதிலும் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

தங்கள் உண்மையுள்ள

S. Radhakrishnan





E. M. S. NAMBOODIRIPAD
CHIEF MINISTER
TRIVANDRUM

31st August '67

அன்புள்ள திரு. மாறன்,

எனது நண்பர் திரு. அண்ணாதுரை அவர்களை அவரது 59-வது பிறந்த நாளில் வாழ்த்துவது எனக்குமிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இவ்விழா நேரத்தில் 'முரசொலி' சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமுடையதாகும்.

தமிழ் நாட்டின் மக்கள் தங்களது மொழி, பண்பாடு, அரசியல் குறித்து தன்னுணர்வுபெற அவர் ஆற்றிய பணி விரித்துரைக்கத் தேவையற்ற ஒன்று.

அவர் மேலும் பல நலன்கள் பெற்று விளங்கிட வேண்டுகிறேன்.

E. M. S. Namboodiripad

அன்புடையீர்,

திரு அண்ணுதுரை அவர்கள் முதன் மந்திரி பதவி அடைந்ததோடு அவர் களின் 59-வது பிறந்த நாள் விழாவும் அன்பர்களால் நடத்தப்படுகிறது. சிறப் பாக 'முரசொலி'யின் மகிழ்சிக்கு வரம்பு இருக்காது.

திரு. அண்ணுதுரை அவர்களுக்கு என் ஆசிகள், முரசொலிக்கு என் வாழ்த்துக்கள்.





**ஜகஜீவன்ராம்**
*விவசாய அமைச்சர்*
*புதுடில்லி.*



தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணு துரை அவர்களின் 59வது பிறந்த நாளை யொட்டி 'முரசொலி' 1967 செப்டம்பர் 15ந் தேதி சிறப்பிதழ் வெளியிட இருப்பதறிந்து மகிழ்ச்சி.

தமிழகத்தில் 'அண்ணு' என்று பிரபலமாகியுள்ள திரு. அண்ணுதுரை ஒரு மக்கள் தலைவர். ஒளி உமிழும் பேச்சாளர்; நாடறிந்த எழுத்தாளர், வெற்றிகரமாக கட்சியை வழிநடத்திச் செல்லும் அமைப்பாளராகவும் ஆகியுள்ளார்.

மக்களின் தேவைகளை உணர்ந்தவர் அவர். தாம் வெற்றிகரமாகத் தலைமைத் தாங்கிச் செல்லும் தி. மு. கழகத்தை நிறுவியவர் அவர். அதன் சிற்பி அவர். அவர் தமிழகத்து முதலமைச்சராக ஆகியிருப்பது அவரது இப்பணிகளுக்குக் கிடைத்த சிறப்புமிக்கப் புகழாகும்.

அவர் பல ஆண்டு காலம் அரசியல் கட்சி ஊழியராக, அமைப்பாளராக இருந்துள்ளார். தமது மாநிலத்தின் முதலமைச்சர் என்கிற முறையில் நாட்டின் விவகாரங்களிலே மிகப்பெரும் பொறுப்புக்களை அவர் ஏற்கிருர்.



அவரது 59வது பிறந்த நாள் விழாவின்போது நாட்டின் தொண்டிற்காக பயன்மிக்கநீண்ட ஆயுளை அவர் பெற வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி வாழ்த்துகிறேன்.

(ஜகஜீவன்ராம்)



**ஆர். வெங்கட்ராமன்**
திட்டக்குழு உறுப்பினர்
புதுடில்லி

அன்புள்ள ஆசிரியர்,

இத்துடன் செய்தி அனுப்பியுள்ளேன். இதனை அனுப்பிட ஆன தாமதத்துக்கு வருந்துகிறேன்.

தமிழகத்தின் பிரபல முதலமைச்சர் ஸ்ரீ. சி. என். அண்ணாதுரையின் மகிழ்ச்சிக்குரிய 59வது பிறந்த நாள் விழாவின் போது எனது நல்வாழ்த்துக்களையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் பொருளாதாரம் திருப்தியற்றுள்ள இக்காலத்தில் ஸ்ரீ அண்ணாதுரை நிர்வாகப் பொறுப்பினை ஏற்றிருக்கிறார். அத்துடன் நமது தாய் நாட்டின் ஒற்றுமையையும் ஐக்கியத்தையும் குலைக்கக் கூடிய பலவாறான சர்ச்சைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தத் தடை மதில்களைத் தகர்த்து நாட்டை வள வாழ்வை நோக்கி—புகழை நோக்கி வழி நடத்திச் செல்ல அரசியல் மேதாவிலாசம் அவசியப்படுகின்றது. மதிப்பிற்குரிய தமிழக முதலமைச்சர் இயல்பாயமைந்த தனித்த ஆற்றலும், சாமர்த்தியமும் நிரம்பப் பெற்றவராதலால் நாட்டிற்கும் நமது மக்களுக்கும் சரியான பாதை காட்டிச் செல்வார் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

கல்வி, தொழில்வளம், கிராமங்களுக்கு மின்சாரம் வழங்குதல், சாலை அமைப்பு, போக்குவரத்துத் தொடர்புகள் முதலான துறைகள் யாவிலும் தமிழகம் முன்னேற்றத்தின் முன்னணியில் இருக்கிறதென்ற புகழைப் பெற்றுள்ளது. பெற்ற புகழைப் பேணவேண்டுமென்பதோடு, வருகின்ற ஆண்டுகளில் புகழைப் பெருக்கிட வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழகத்தின் நலனுக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் முதலமைச்சர் அவர்கள் காட்டி வருகிற ஆர்வப் பற்றோடு கூடிய ஈடுபாடு சிறந்த பலனளித்திடும் என்பது உறுதி.

தமிழக மக்களுக்கு அவரது சேவை கிடைத்திட அவர் நல்லன பல எய்திட அன்பார்ந்த முதலமைச்சரை, எனது நண்பரை வாழ்த்துவதில் நான் தனித்த மகிழ்ச்சி அடைகிறேன்.

R. Venkataraman

(ஆர். வெங்கட்ராமன்)



## ஜி. புபேஷ் குப்தா

நாடாளுமன்ற உறுப்பினர்
புதுடெல்லி

திரு. சி. என். அண்ணுதுரை அவர்களது 59வது பிறந்தநாள் விழா நேரத்தில் எனது மனங்கனிந்த வாழ்த்துக்களேயும் பாராட்டுக்களேயும் அவருக்குத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவர் மாநிலங் களவை உறுப்பினராக இருந்த நாட்களில் அவரை நான் தெரிந்து கொண்டேன். அவரிடத்தில் காணும் ஒரு தலைவனுக் குரிய பண்புகளும், இனிது பழகும் அவரது பான்மையும் என்ன மிகவும் கவர்ந்தன. தமிழகத்திலே காங்கிரஸ் தோற்கடிக்கப் பட்டுள்ளதறிந்து நாங்கள் இயற்கையிலேயே மகிழ்கிறோம். இந்தத் தோல்வியை ஏற்படுத்துவதில் திரு. அண்ணுதுரை வகித்த பங்கு சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பிடத் தக்கது—முக்கியமானது. மகத்தான தமிழ் மக்கள் உருவாக்கிய புகழ்மிக்க காங்கிரசல்லாத அரசின் தலைவராக இப்போது இருக்கும் அவரிடம் இந்நாட்டின் முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைத்தையும் ஒன்றுபடுத்தி மக்களின் துன்பத் துயரங்களை அகற்றுவதற்கான தலைமையை நாங்கள் இயற்கையாகவே எதிர்பார்க்கிறோம்.

கடந்தகால காங்கிரஸ் அரசின் துயரமிக்க பழமையிலிருந்து இவர்கள் விடுபட்டு. ஜனநாயக ரீதியில் தொழிலாளிகளின் முயற்சிகளோடும் ஆசை, அபிலாஷைகளோடும், ஒன்றிப் போவதிலேயே—பிரபலமாகியுள்ள இந்தக் காங்கிரஸ் அல்லா அரசின் வெற்றியும் திரு. அண்ணுதுரையின் தலைமையினுடைய வெற்றியும் அடங்கியுள்ளது. நமது நாட்டின் நெருக்கடி மிக்க இக்காலத்தில் திரு. அண்ணுதுரையின் மீது மிகப்பெரும் பொறுப்புக்கள் விழுந்துள்ளன. அவரது ஆட்சித் தலைமை நமது நம்பிக்கைகளை நியாயப்படுத்துமென்று நம்புவோமாக.

Bhupesh Gupta

(ஜி. புபேஷ் குப்தா)



## ஏ. கே. கோபாலன், எம்.பி.

மார்க்சிஸ்ட்
புதுடில்லி



அன்பார்ந்த நண்பரே,

கடந்த சில நாட்களாக இந்தியாவுக்கு வெளியே சென்றிருந்ததால் கட்டுரைஒன்றை எழுத இயலாமற் போனது. இன்றே நான் இந்தியா வந்தடைந்தேன். இருப்பினும் தமிழகத்து முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரை அவர்களது 59-வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தாங்கள் வெளியிடுகிற 'அண்ணுமலருக்கு' இச் செய்தியினை அனுப்புவதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

"நாட்டின் பொருளாதார நெருக்கடி வேர் ஊன்றி வருகிறது. இது உலக நெருக்கடியின் ஒரு பகுதி. காங்கிரசானது தன்னுடைய கடந்த 20 ஆண்டு கால ஆட்சியின் மூலம் நாட்டு மக்களது வாழ்வைப் பாழாக்கிவிட்டது. இருந்தும்தமிழ்நாடு காங்கிரஸ்தான் தன்னை அசைக்க முடியா பலத்தோடு இருப்பதாக பெருமை பேசி வந்தது. முற்போக்கு சக்திகளனைத்தையும் ஒன்றுபடுத்தி காங்கிரசைப் பதவியிலிருந்து தூக்கியெறிந்த பெருமை அனைத்தும் அண்ணுவின் போர் தந்திரத்திறனுக்கும், மேதைத் தன்மைக்குமே சாரும். மாநிலத்தின் தி. மு. க.வுக்கும், அண்ணுவுக்கும், இதர இடது சாரி சக்திகளுக்கும் எல்லா புகழும் சேருவதாக."

"தோற்கடிக்கப்பட்ட காங்கிரஸ் அதன் வழக்கம்போல மக்கள் ஆதரவைப் பெற்ற அரசைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. சட்டம் ஒழுங்கைக் குலைக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள காங்கிரசார் சட்டம் ஒழுங்கு குறைந்துவிட்டதாகக் கூச்சலெழுப்பத் துவங்கியிருக்கிறார்கள். அதனால் திரு. அண்ணுதுரை தமது உயர்ந்த மேதைத் தன்மையின் காரணமாக தொடர்ந்து ஐந்தாண்டு காலம் முழுவதும் பதவியில் இருப்பார். அப்படி இருந்து மக்களுக்கு நிவாரணம் அளித்திடுவார். எதிர் அணியில் உள்ளவர்களையும் தன் பக்கம் ஈர்ப்பார்."

"துணிவான பல நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் இந்தியாவின் பிற காங்கிரசல்லா மாநில அரசுகளுக்கும் அண்ணு முன்னுதாரணமாக விளங்குவார் என்று நான் எதிர்பார்க்கிறேன்—நம்புகிறேன். இத்தகைய துணிவான மக்கள் நல நடவடிக்கைகள் மூலம் தமிழ் மாநிலத்தில் காங்கிரசை என்றென்றும் தலைதூக்க முடியாமல் அதளபாதளக் குழியில் புதைக்க வேண்டும்."

"ஒரு மாநிலத்தை இன்னொரு மாநிலத்தோடு மோதவிட்டு அவற்றின் மக்களுக்கிடையே மோதலையுண்டாக்கிட முயலுகிற இந்தியப் பிற்போக்கு சக்திகளின் போக்குகளைப் புரிந்துகொண்டு இதர காங்கிரசல்லா அரசுகளோடும் அதன் மக்களோடும் ஒற்றுமையை வளர்த்து மேம்பாடுறச் செய்வதன் மூலம் இந்நாட்டு மக்கள் மகிழ்ச்சியோடு கூடிய சுரண்டலற்ற சோஷலிச வாழ்வை நோக்கி முன்னேறிட அண்ணு அவர்கள் முயலுவாரென்று நம்புகிறேன்.



இந்தியாவின் ஜனநாயக, சோஷலிச இயக்கங்களுக்கு வலிவைக் கூட்டக் கூடியவராகவும், இந்நாட்டின் முற்போக்குச் சக்திகளை ஒற்றுமைப் படுத்தவும், அண்ணு அவர்கள் நீண்ட ஆயுளுடன் உடல் நலமுடன் மகிழ்ச்சியோடிருக்க, வேண்டுமென்று நான் வாழ்த்துகிறேன்.

AKGopalan

(ஏ. கே. கோபாலன்)



**எம். ஆர். மசானி**
சுதந்திரா கட்சி மத்ய அலுவலகம்
பம்பாய்-1

**சி. என். அண்ணாதுரை** மகிழ்ச்சிகரமான நலன்கள் பல எய்தி வாழ எனது நல்வாழ்த்துக்களை அவரது 59வது பிறந்த நாளில் 'முரசொலி' மூலம் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

அவர் வகிக்கும் பொறுப்பினுக்கொப்ப தான் செய்கிற காரியம் யாவிலும் அவர் கொண்டுள்ள உளப் பூர்வமான ஈடு பாடும், அவரது அண்மைக்காலப் பேச்சுக்களும் என்னை மிகவும் கவர்ந்து விட்டன.

நாட்டிலே ஏற்பட்டுள்ள காங்கிரஸ் அல்லா அரசுகளில் திரு. அண்ணாதுரை தலைமையில் இயங்கும் தி. மு. கழக அரசும், ஒரிஸாவில் எனது நண்பர் சிங்தேவின் தலைமையில் இயங்கும் கூட்டணி அரசும் ஆக இவ்விரண்டும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன என்பதை நான் தனியாகவும் பொது மேடையிலும் திரும்பத் திரும்பச் சொல்லி வந்திருக்கிறேன்.



(எம். ஆர். மசானி)





**எம். ஆர். வெங்கட்ராமன்**
மார்க்லிஸ்ட்
சென்னை-5

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், என்னுடைய பெரு மதிப்புக்குரியவருமான திரு. அண்ணாதுரை அவர்களின் 59-வது பிறந்தநாளில் அவருக்கு எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இந்தியாவிலும் தமிழ் மாநிலத்திலும் வரலாற்று முக்கியத்துவமுள்ள ஒரு கால கட்டத்தில் நாம் இன்று வாழ்கிறோம். கடந்த பொதுத் தேர்தல் முடிவுகள் இதை மின்வெட்டுப்போல் எடுத்துக் காட்டிவிட்டன. அந்த முடிவுகளில் முதல் வரிசையில் நிற்பது தமிழக மக்களின் சாதனையேயாகும். காங்கிரஸ் கட்சியின் 20 வருடக் கொள்கைகளை நிராகரித்து மக்கள் தீர்ப்புக் கூறினார்களென்றே நான் கருதுகிறேன். மக்களின் பேராதரவுடன் தி. மு. க. அமைச்சரவை நமது மாநிலத்தில் மலர்ந்தது. மாநில முதலமைச்சராக திரு. அண்ணாதுரை அவர்கள் மேலும் அதிகமான பொறுப்புக்களை ஏற்றுள்ளார்கள்.

தமிழக மக்கள் நல் வாழ்வுகாண எவ்வளவோ செய்ய வேண்டியுள்ளது. ஆனால் அதிகாரமனைத்தும் அனைத்திந்திய மத்திய அரசின் கையில் குவிந்து நிற்கிறது. மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களும், போதிய நிதி வசதியும் வழங்கப்படாவிடில், அவற்றைப் போராடிப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமே தமிழக மக்களுக்கு சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. ஆயினும், ஒன்றுபட்டு நிற்கும் மக்களின் உறுதியான அசைவு, வெல்ல முடியாததொன்றும் இந்த உலகத்தில் இல்லை. பொதுத் தேர்தல் அனுபவமே இதுதான்.

வாய்ப்புக்களும் சோதனைகளும் மிக்க இந்தக் கால கட்டத்தில், சாதாரண மக்கள் புதுவாழ்வு பெற, திரு. அண்ணாதுரை அவர்களின் ஆற்றலும், திறனும் அனைவருடனும் அன்புடன் பழகி அணைத்துச் செல்லும் சீரிய பண்பும், தி. மு. க. வுக்கும், தி. மு. க. அமைச்சரவைக்கும் மட்டுமின்றி, தமிழக மக்களுக்கும் நீண்ட காலம் கிடைத்துக் கொண்டேயிருக்க வேண்டுமென்று, சி. என். ஏ. அவர்களை இந்த நன்னாளில் மீண்டும் அன்புடன் வாழ்த்திக்கொள்கிறேன்.

அன்புள்ள,
**எம். ஆர். வெங்கட்ராமன்**

டாக்டர் சத்தியவாணிமுத்து
அரிசன நல, செய்தித்துறை அமைச்சர்
சென்னை-9



அறிவும் செல்வமும், பண்டைப் பெருமைக்கேற்ற பண்பும் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்கும் சிற்பியாக அறிஞர் அண்ணா அவர்கள் விளங்குகிறார்கள். அண்ணாவின் ஆட்சி, தமிழக மக்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பு. தாழ்த்தப்பட்டு, அல்லல் பட்டுக் கிடந்த மக்களின் நலன்களுக்கு அவரே உற்ற காவலர்.

நமக்காக அல்லும் பகலும் உழைக்கும் அண்ணனின் பிறந்த நாளை, திருநாளாக இன்று கொண்டாடுகிறோம். மக்கள் அனைவரும் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற குறிக்கோளை அடைவதில் நாம் ஒவ்வொருவரும் நமக்குரிய பணியைச் செய்து முடிக்க, இந்த நல்ல நாளில் உறுதி கொள்வோமாக.



புதிய சமுதாய அமைப்புக்கு உற்ற துணையாக வீறு கொண்டு பணியாற்றும் 'முரசொலி'யின் சீரிய முயற்சிகளுக்கு என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புள்ள
சத்தியவாணி முத்து

**செ. மாதவன்**
சட்ட அமைச்சர்
சென்னை-9



பத்திரிகை உலகில் ஒரு தனி வழி வகுத்தது "முரசொலி". தமிழ்ச் சொல்லுக்கு எத்தனை ஆற்றலும் சக்தியும் உண்டு என்பதைப் புலப்படுத்துவதில் "முரசொலி"யின் சாதனை தனிச் சிறப்பானது. அறிஞர் அண்ணாவின் அறிவியக்கப் படைக்கு எழுச்சியூட்டும் ஒலி 'முரசொலி'.

அண்ணா அவர்களின் பிறந்த நாளை, திருநாளாக இன்று கொண்டாடுகிறோம். இந்த நாளில் நாம் எழுச்சியும் மகிழ்ச்சியும் பெறுவது மட்டும் போதாது. கல்வி, தொழில், வேளாண்மை முதலிய ஒவ்வொரு துறையிலும், அண்ணா அவர்கள் காட்டும் வழியில் செயல்படுவதே அண்ணா அவர்களுக்கு நாம் செலுத்தக் கூடிய பிறந்த நாள் பரிசு என்று கூறி 'முரசொலி அண்ணா மலர்' முயற்சிகளுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்
**செ. மாதவன்**

